# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

*************

## ஊடக அறிக்கை

**<u>பொது - தனியார் - பங்குடைமை தொடர்பான மாதிரிகள் மற்றும் கட்டமைப்புகள் குறித்து இலங்கை அதிகாரிகளுக்கான ஆளுமை விருத்தி செயல்திட்டம்</u>**

பொது - தனியார் - பங்குடைமை (PPP) குறித்த ஆளுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விசேட பயிற்சி ஒன்றில் கலந்துகொள்வதற்காக இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்த 14 அதிகாரிகள் உள்ளிட்ட பேராளர்கள் குழு ஒன்று 2026 பெப்ரவரி 23-27 வரை இந்தியாவுக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தது. ஜனாதிபதி செயலகம். வீதிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு , எரி சக்தி அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த குழுவில் உள்ளடங்குகின்றனர்.

2. 2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது அவரால் அறிவிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் இந்த ஆளுமை விருத்தி பயிலமர்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டன. இதன் கீழ் இலங்கை அதிகாரிகளுக்காக வருடாந்தம் 700 தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சிகளை வழங்க இந்தியா தீர்மானித்தது.

3. நிதி அமைச்சின் கீழான அருண் ஜெட்லி தேசிய நிதி முகாமைத்துவ நிறுவனத்தில் (AJNIFM) இந்திய அரசாங்கத்தால் குறித்த ஒரு வார கால பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. இந்தியாவின் PPP கொள்கை கட்டமைப்பு, நிறுவன கட்டமைப்பு, நெருக்கடி கால ஒதுக்கீட்டு வழிமுறைகள், செயல்திட்ட கட்டமைப்பு மற்றும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, மெட்ரோ ரயில் சேவை மற்றும் விமான நிலைய உட்கட்டமைப்பு உள்ளிட்ட துறை சார்ந்த ஆய்வுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய தொழில்நுட்ப ரீதியானதும் தொனிப்பொருள் அடிப்படையிலானதுமான பரந்த அமர்வுகளை இது உள்ளடக்கியிருந்தது. நேரடி அனுபவத்தைப் பெறும் கற்றல் அம்சங்களின் ஒரு பகுதியாக, பங்கேற்பாளர்கள் PPP மாதிரியின் கீழ் செயல்படுத்தப்படும் ஒரு முக்கிய கிறீன்பீல்ட் விமான நிலையத் திட்டமான ஜேவாரில் உள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்திற்கு ஒரு கள விஜயத்தை மேற்கொண்டனர்.

4. தொழில்முறை ஆளுமைகளை வலுப்படுத்துதல், அறிவு பரிமாற்றத்தை ஊக்குவித்தல் மற்றும் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான PPP துறையில் நிறுவன மற்றும் அரசாங்கத்திற்கு இடையிலான இணைப்புகளை வலுவாக்கல் ஆகியவற்றிற்கு இந்த செயல் திட்டம் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கியது, இது இரு நாடுகளின் ஆளுமை விருத்தி மற்றும் மக்களை இலக்காகக் கொண்ட பொருளாதார ஒத்துழைப்புக்கான பொதுவான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது.

* * * * *

**கொழும்பு**
**02 மார்ச் 2026**